தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 1.] MADRAS:—SUNDAY JANUARY, 2, 287. A. S. [Monthly, 4 Annas.

இப்புதுவருஷம் எல்லோருக்கும் நல்வருஷமாகுக.

இப்பிரபஞ்சவிகற்பம்.	கொலைசெய்யாதிருப்பாயாக.
பிர்ம்மவித்தியா.	மெய்யறிவு.
இந்துதத்துவப்பிரபாவம்.	வர்த்தமானம்.

இப்பிரபஞ்சவிகற்பம்,

(206-வது பக்கத்தொடர்ச்சி.)

கடற்காற்று நிலக்காற்றுண்டாவதெப்படி ?

காலைப்பொழுதிலும் பகலிலும் நிலத்திலிருந்து சமுத்திரத்தைநோக்கி மோதும்காற்றுக்கு நிலக்காற்று (Land Breeze) என்றுபெயர். மாலைப்பொழுதில் கடலிலிருந்து நிலத்தைநோக்கிமோதுங்காற்றுக்குக் கடற்காற்று (Sea Breeze) என்றுபெயர். இவ்விரண்டுவிதமானகாற்றுகளுண்டாவதற்கு காரணங்களை ஈங்கெடுத்துக்கூறுவாம்.

பகலில் சூரியன் உக்கிரமாய்காயும்போது சூரியகிரணங்கள் நிலத்தில் கல், மண், முதலியவைகளின்மேல்விழுந்து அவைகளை அதிகசீக்கிரத்தில் சூடாக்கிவிடும். ஆயினமையின், பகலில் கல், மண், முதலியவைகள்மீது நமது கையைவைத்தாலும், கால்பட்டாலும் நமது கைகளும் கால்களும் சூட்டைப்பொறுக்கமாட்டாமற் போய்விடுகின்றன. இத்தருணத்தில் நாம் சட்டுக்கேகி அதிற்குளித்தால் அந்தஜலம் சில்லென்றிருக்கும். இதனால் பகலில் சூரியன் உக்கிரமாய்காயும்போது கடலைவிட நிலம் அதிகசீக்கிரத்தில் சூடாகிவிடுமென்பது நிச்சயமென அறியலாம். ஆனால் மாலைப்பொழுதில் சூரியன்மறைந்தவுடனே நிலத்திலுள்ள வஸ்துக்களின்காங்கை, எவ்வளவு சீக்கிரத்தில் கிரகித்ததோ, அவ்வளவுசீக்கிரத்தில், குறையும். கடலிலிருக்கும் நீரின்காங்கை அவ்வளவு சீக்கிரத்தில்பிரியாது. ஆதலால் பகலில்நிலம் அதிகவெப்பமாயிருப்பதால் நிலத்திலிருக்கும் வாயு அதிகவெப்பமாய்விடும். அவ்வாறு வெப்பமாய்விடுவதால், அவ்வாயு சூட்டாலஇளகிமேலேகிளம்பும். அப்படி கிளம்புவதால் கடலிலிருந்து நிலத்தைநோக்கி குளிர்ந்தகாற்றுமோதும். அவ்வாறு மோதுதலுக்கு கடற்காற்று என்றுபெயர். மாலையிலும், இரவிலும், நிலம் அதிகவிரைவில் குளிர்வதாலும், நிலக்காற்றைவிட கடற்காற்று அதிகவெப்பமாய்இளகி மேலெகிளம்புவதாலும், நிலத்திலிருந்து காற்று கடலைநோக்கிமோதும். அவ்வாறுமோதுதலுக்கு நிலக்காற்றுஎன்றுபெயர்.

இக்காலத்தில் பாடசாலைகள்தோறும் பூகோள உருண்டைவழங்கிவருகின்றதல்லவா ? அவ்வுருண்டையின் இரு "துருவமுனை" (Poles) களுக்கு இடையில், ஒரு ரேகை பூமியைச்சுற்றியிருக்கின்றது. இந்தரேகைக்கு "மத்தியரேகை" (Equator) என்றும் "நிரக்ஷரேகை" என்றும்பெயர். மற்ற இடங்களைப் பார்க்கினும் சூரியன் இந்தரேகைக்குநேராக இருந்துகொண்டு அதிக உக்கிரமாய் தனது வெப்பத்தையும் ஒளியையும் தருகின்றான். இந்தரேகை பூமியை இரண்டு அர்த்தகோளங்களாகப்பிரிக்கின்றது. இந்தரேகையினின்று வடக்கேயாயினும் தெற்கேயாயினும் போகப்போக பூமியின் உஷ்ணம் கொஞ்சம்கொஞ்சமாய் குறைந்து கடைசியில் "துருவமுனை" (Poles) களில் வெகுதளிர்ச்சியாயிருக்கும். இவ்விரேகைக்கு மேலும், அதனிருபுறங்களிற்சற்றுதூரங்களிலும் சூரியன் மிக உக்கிரமாய்க்காயும். அவ்வாறுகாய்வதால் அங்குள்ளகாற்று மிக உஷ்ணமாகி அணிஅணியாய் மேலேகிளம்பும. இப்படி பூமியின் நடுவிலுள்ளகாற்று மேலே அணிஅணியாய்செல்லவே இவ்வாறு சென்றகாற்றின் இடத்தைநிரப்ப வடக்கிலும் தெற்கிலுமுள்ள குளிர்காற்று இம்மத்தியபாகத்திற்கு மோதிவருகின்றது. இவ்வாறு மோதிவருங்காற்றுக்குத்தான் கடற்காற்றென்றுபெயர். இப்பெயர் கப்பற்காரர்களால் தரப்பட்டிருக்கின்றது. இக்காற்று ஓரேவிதமாய் காலந்தவறாமல் வீசிக்கொண்டுவருகின்றமையாலும், கப்பற்காரர்களுக்கு இக்காற்று மிக உதவிசெய்கின்றமையாலும் இக்காற்றுக்குக் கப்பற்காற்றென மாலுமிகளால்பெயரிட்டுவழங்கிவருகின்றது.

இ. மு.

(இன்னும்வரும்.)

பிரம்மவித்தியா.

ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் ஒருதேசமாவது நாத்திகர் நிறைந்துள்ளது இல்லையென்று கூறியதனால் நாம் அதனால் நாத்திகருக்குவரும் இழுக்கென்னை என்றோம். இதற்குமுன்னே காட்டியபடி அசம்பவமான விடைபகர்ந்ததுமல்லாமல் தேசங்கள் க்ஷேமமடைவதும் மதங்களின் பிரயோசனங்களில் ஒன்றே என்கின்றார். மதங்களால் சனங்களுக்கு இன்னவாறு ஒற்றுமையுண்டாகின்றதென்று அனுபவ திருட்டாந்தமுகத்தாற் காட்டுதல் ஒழிந்து சொல்லளவில் சித்தாந்தம் செய்துவிட்டார். இது வாக்கும் நமது சாஸ்திரியாரைப்போன்ற தருக்கசாஸ்திரப் பிரவீணர்கள் சொல்லத்தக்கவிடை? மதங்களால் எங்ஙனம் ஒற்றுமையுண்டாகின்றதோ யாம் கனவிலுங் கேட்கவில்லை.

தேசங்கள் க்ஷேமமடைவதென்றால்—மாதம் மும்மாரிபொழிதல், அகாலமரணமற்றிருத்தல் கொலைகளவுகள் காமாதி துர்க்கிருத்தியங்கள் மருந்திற்கும் அத்தேசத்தில் கிடையாதிருத்தல் முதலியனவன்றோ? இப்படி எந்ததேசமிருக்கிறது ? இப்படியும் சிலதேசமிருப்பின் அவை அங்ஙனமிருத்தற்கு மதந்தான் காரணமென்று சாஸ்திரியார் எவ்வாறு ரூபிப்பார் !

வேதாங்கிகாரமுடைய சகலமதங்களையும் அனுட்டிப்பது இவ்விந்துதேசமோ அன்றோ. இதில் வாந்திபேதி வைசூரி முதலிய துர்வியாதிகளும், கருவில் மரித்தல் பிறந்தஉடன் மரித்தல் இளம்பிராயத்தில் மரித்தல் வாலியதசையில் மரித்தல் ஆகிய அகாலமரணங்களும், பிறர்மனைவிழைதல் பிறர்பொருள் கவர்தல் பிறர்குடி கெடுத்தல் பொய்ச்சான்று பகர்தல் மதுபானம்செய்தல் கொலைபுரிதல் முதலிய துர்க்கிரியைகளும் இவ்விந்துதேசத்திற் கிடையாவோ; இவைகளெல்லாம் இவ்விந்துதேசத்திலும் ஒப்பவிருப்ப, தேசக்ஷேமத்திற்கு மதங்களும் ஓர் காரணந்தானென்றது என்ன ஆதரவைப்பற்றி ! திண்ணைக்குத் தேள்கொட்ட முடாவிற்கு நெறிகட்டியதென்பதுபோல் தேசக்ஷேமத்திற்கு மதங்களும் ஓர் காரணந்தானென்று மொட்டந்தலைக்கும் முழங்காலிற்கும் முடிபோடுவது வியவகாராதிகளோடோடும் வித்துவான்களுக் கழகாமா? மதங்களால் ஒற்றுமை யுண்டாகின்றதென்கின்றாரோ, மத ஒற்றுமையாற்றான் க்ஷமணுதிகளைச் சைவர் கழுவேற்றினார்கள்போலும்! மதஒற்றுமையாற்றான தென்கலையார் வடகலையாரையும் வடகலையார் தென்கலையாரையும் கோடிகோடியாய் வெட்டிமடித்தார்கள் போலும்! நேற்றுநடந்த ஆப்கானிய யுத்தத்திற்கும் சேலம் கலகத்திற்கும் காரணம் மதங்களால் உண்டான ஒற்றுமைதான் போலும்! இதுகளையெல்லாம் அனுபவயுக்தமாய் அறிந்துதான் நமதுபிரியா பிரம்மஸ்ரீ - சீனிவாச சாஸ்திரியார் காகத்தின்கழுத்தில் பனங்காயைக்கட்டினதுபோல மதத்தின்கழுத்தில உலகக்ஷேமத்தையும் ஒற்றுமையையுங் கட்டினார்போலும் ! மனம் என்பது இது, அதன் இலக்கணங்கள் இன்னவென்று நிரூபிக்கவேண்டிய நமது நண்பர் "மூளையென்பது மனத்திற்கு ஓர் ஸ்தானந்தான்" என்றும் அதற்கு அறியுந்தன்மையில்லையென்றும் கூற, அதன்மேல் மனமென்பதுதான் யாதென யாம் வினவ; அது அறிவின் தெளிவென்றும், அறிவு யாதெனில், புலனுணர்ச்சியென்றும், புலன் யாதென்னில் அவை கருவியென்றும், ஓரிடத்திலும் தரித்துநிற்காமல் ஓடிஓடி மறைந்தால் இவரைப்பரிகாசம்செய்யாமல் வேறென்செய்யலாம்.

நமது முன்னோர்கள் நாத்திகத்தை யெவ்வாறு கண்டித்தார்கள் என்று நாம் வினவியதற்கு நமது நண்பராகிய சாஸ்திரியார் "கண்டன கண்டகாத்தியம்" "நியாயகுசுமாஞ்சலி" "ஈசுரானுமான சிந்தாமணி" என்று சில நூற்பெயரைமட்டுமே யெழுதிவிட்டார். இத்தகைய நூற்களில் அதி சிரேஷ்டமா

ன ஒன்றில் ஓர் நியாயத்தையெடுத்து நாத்திகத்தை இவ்வாறு நிர்விவாதமாய் கண்டித்திருக்கின்றார்கள் என்று காட்டுவாரோல், அதன்மேல் ஆக்ஷேபம் நிகழாவிடத்து உசிதமென்றேகொள்ளச் சித்தமாயுள்ளேம. இங்ஙனம் செய்யாமல் நூற்பெயர்மட்டில் சொன்னதினால் மலைவெய்த தென்னாலுராமன் காலத்திருந்த வித்துவானல்ல நாம். (தென்னாலுராமன் காலத்திருந்த வித்துவான்கதை யாதெனின்:—இராஜசமஸ்தானத்தில் ஓர் பிரபல வித்துவான்வந்து இறுமாந்திருந்ததைக்கண்ட அந்த சமஸ்தான வித்துவான்கள் பயந்து தென்னாலுராமனிடம் முறையிட, அத்தென்னாலுராமன் ஓர் தந்திர யுத்தியால் அவனை யோட்டிவிடக்கருதி எள்ளின் சுள்ளியை எருமைக்கட்டுங் கயிற்றால் புத்தகரூபமாய்க்கட்டி கக்கத்திற்கொண்டுபோய் இராஜசமஸ்தானத்தில் பொத்தெனப் போட்டான். அங்குள்ளார் அது என்னபுத்தகமென்ன அவன் அது "திலகாஷ்டமகிஷபந்தனம்" என்றான். அங்கிருந்த அவ்வித்துவான் அப்பெயருக்கே பொருள் விளங்கிக்கொள்ளக்கூடாமையால் நூல்எத்தன்மைத்தோவென மலைத்துப் போனவிடம் தெரியாமல் ஓடிவிட்டான்.

பிறந்தகுழந்தைகளுக்கும் ஜீவனுண்டே மனமுண்டாவென யாம் கேட்டது இவர்கூறிய மனோதத்துவத்தைச்சுட்டியேயல்லாமல் வேறல்ல. யாமும்முன்குழவியாயிருந்தே வளர்ந்து முதிர்ந்தவராதலால் எமக்கு அக்காலத்தில்மனமிருந்ததாய் அப்போதும் எப்போதும்தோனறவில்லை. மனம் என்பதற்குயாம் கொண்டபொருள் இன்னதென்று நிர்விவாதலக்ஷணயுத்தமாகவும், அனுபவப்பாங்காகவும் பின்னர்நாம் சித்தாந்திக்குங் கால்காட்டுவோம். "வீட்டின்உறுப்புகளிற் சோரதமனிதன் வீட்டிலிருப்பதும், அவ்வீட்டின்ஓர்பாகம் கெட்டால் அவ்வீட்டைவிட்டுமனிதன் ஓடுவதும் நாம்கண்டோமாதலால் அதுபோலசரீரத்தின்ஓர்பாகம்கெட்டால் ஆத்மாவேறுசரீரததைத் தேடிக்கொள்கின்றது" என்று குறிப்பிக்கின்றார். இங்ஙனமேல் சரீரத்தின் ஓர்பாகமாகிய கை-கால் கண் மூக்கு நாக்கு இவை பழுதுபட்டதேகத்தில் ஆத்மாவெனப்பட்டது ஓடாதுஇருப்பதும், தலைமூளை இருதயம் இவைபழுதுபட்டதேகத்தை விட்டு அவ்வாத்துமாஓடுவதும் ஏன்? இதனால் ஆன்மாவுக்கும் சரீரத்திற்கும் சம்பந்தமில்லையென எப்படிச்சொல்லலாம்? குளோரபாரம் என்னும் மயக்கவஸ்துவை உசுவாசித்தலினால் உதிரவோட்டந்தவிர தேகவுறுப்புகள் ஒன்றும் கெடாதிருக்கபிணமாவதேன்?

இந்துதத்துவபிரபாவம்

நமது முன்னோர்கள் பிரதமத்திலேயே தத்துவக்கியானிகளாக விருநதார்களென்பதற்கு அன்னோர்சாத்திரங்களே போதிய ஆதாரமுடயவைகளாகவிருக்கின்றன. பல வேறுவிதமான தத்துவாம்ஸ தாத்பரியங்கள் நாளுக்குநாள் பரவிவந்ததென்பது வேதத்திலே, (பிராமணம்) என்னும் அமிசத்திலேகாணலாம். உபநிஷத்துகளிலும் இதனதுஉண்மை விளங்கக்காணலாம். இவர்கள் பரிபாலித்துவந்த நூல்களே-நியாயம், வைசேடிகம், சாங்கியம்,யோகம், பூர்வமீமாம்ஸம், உத்ரமீமாம்ஸம். இவற்றை முறையேசெய்தவர்கள் கௌதமர்-கணாதர் - கபிலர்-பதஞ்சலி-சைமினி-வாதராயணர்-அல்லது வேதவியாசர். இவர்கள் அனைவரும்தத்தம்நூலை நியாயநூலின் பிரமாணத்தைக்கொண்டே செய்தவர்களாதலாலும் அந்தநியாய நூலில் கூறும் பதார்த்தஇலக்கணங்களில் காரணரூபமாகிய ஒவ்வொருபரமாணுவும்நித்தவியாபகமென்கின்றமையானும்,எல்லாப்பதார்த்தங்களும் அணுச்சையோகமேயாதலாலும், காரணம் எத்தன்மைத்தோ அத்தன்மைத்தாகவே அதன் காரியமுமிருத்தல் வேண்டுமாதலாலும், பரமாணுவின்காரியமாகிய பதார்த்தம் நித்தியமென்பது நாட்டப்பட்டது. இந்த சித்தாந்தத்தை ஆங்கிலேயர் [Materialism] என்கின்றார்கள். சிலர் பார்க்கப்பட்ட உலகாதி சகலபதார்த்தங்களும் உண்மைப்பொருள்கள் அல்லவென்றும், அவை விசாரணையில் சொரூப பேதப்படுகின்றமையால் சூன்னியமென்றும், அவற்றை அறியும்மனமே சகலமுமென்றும்சொல்கின்றார்கள். இதை ஆங்கிலேயர் [Idealism] என்கின்றார்கள். மூன்றாவது வகுப்பினர்களாகிய இன்னுஞ்சிலர் தமக்குத்தோன்றுகிற சித்துசடமாகிய சகலமும் உலகாத்மகமென்றும்; அதுவே கடவுளென்றும், உள்ளவைசகலமும் அவராற்சிருஷ்டிக்கப்பட்டதென்றும், எது எது எவ்வாறு என்னகாரணத்திற் கிருக்கின்றதோ அது அது அவ்வாறு இருத்தலேசரியென்றும்சொல்லுவர். இனி இம்முப்பகுதியினையுடைய தத்துவக்கியானங்களின் சம்பந்தா சம்பந்தங்களையும் தொந்தநிர்த்தொந்தங்களையும் பங்கமில்லாமல் சங்கையற அங்கை நெல்லிக்கனிபோல் இங்கெடுத்துரைப்பாம். நியாயசாத்திரமானது, நமக்குப்புறம்பாயுள்ள பிரபஞ்சத்தினளவே நமது அறிவு விளங்கியிருக்குமென்றும், அப்பிரபஞ்சத்தில் நமக்கு விளங்குகிற அறிவுஐந்தேயென்றும்,அவை சத்த பரிச ரூப ரச கந்தங்களையே அறியுமென்றும், இவற்றிற்கு ஆதாரமாகவும் உலககாரணமாகவும் உள்ளவை பஞ்சபூதங்களேஎன்றும் அதைத்தவிர வேறொன்றில்லையென்றும் கூறும்; வைசேடிகமோ நியாயத்திறகுச்சார்பாய் விசாரவிர்த்திசெய்து சகலமும் பரமாணுவினகாரியமேஎன்றும் மனமாதிகள் அனாதி நித்தியமாகிய அவ்வணுக்களின்பால் அந்தர்க்கதமாய் வியாபித்திருக்கின்றனவென்றும், அவையொருசகாலும் பிரத்தியேகமாகாவென்றும்நிரூபிக்கும். இவை பிரத்தியேகமெனில் இதனை தற்காலம் ஆங்கிலேயர் [Realism] என்பார்கள். (இன்னும்வரும்)

கொலைசெய்யாதிருப்பாயாக.

ஜோசெப் ஸைம்ஸ் என்பவர் முன்னே பாதிரியாராயிருந்து இப்போது ஆஸ்திரேலியாவிலே லவுகீகசங்கத்துத் தலைவராய்ப் பத்திரிகைமூலமாயும் உபந்நியாசமூலமாயும் சுவக்கியான அபிவிர்த்திசெய்துவருகிறார். அடியில்வருவது அவரால் எழுதப்பட்டது.

"கேலைசேய்யாதிருப்பாயாக" என்னும் இந்த கம்பீரமான அபிப்பிராயம் எங்கிருநதுவந்து யூதர்களுடைய நீதிபுஸ்தகத்தில் நுழைந்தது? ஒருவேளை எல்லாக கிரந்தங்களினும் மிகவும் இழிவானதாகிய பைபில என்னும் புஸ்தகத்திலே அந்த வாக்கியத்தைக் காணுவது விந்தைதான். இந்த வாக்கியமானது கழுத்தறுக்கிற உருவங்கள் வரிசைமத்தியில் அருளுருவம் போல நிற்கிறது. "கொலைசெய்யாதிருப்பாயாக"! இந்த வார்த்தைகள் புலியின்வாயிலிருந்தாவது, போப்புமதத்தைவிட்டகன்றவனைத் தெண்டிக்குஞ் சங்கத்தான்வாயிலிருந்தாவது, தற்காலத்திய மதப்பித்தன் வாயிலிருந்தாவது வந்தாலும்வருமேயல்லாமல், அவிஸ்வாசியாகிய மோசே, கொலைபாதகனாகிய ஜாஷ்வா, ஆவியாகிய ஏகோவா இவர்களுடைய வாயிலிருந்து வந்தவையேயல்ல. சென்ற சகாப்தத்திலுண்டான மற்ற கற்பனைகளோடுகூட இந்தக்கற்பனையையும் முக்கியமாய் புத்தசமயக் கொள்கையிலிருந்து திருடியிருக்கவேண்டும்.

அந்த வாக்கியம் எங்கிருந்துவந்தாலும் வரட்டும் நிமித்தமில்லை, அது கம்பீரமானதே, அதினுடைய உண்மைப்பொருளைக் கிரிஸ்துவர்கள் இன்னும் ஆதரணைசெய்தவர்களல்ல. "இரத்தஞ்சிந்தும் ஆட்டுக்குட்டியை" (ஏசுக்கிரிஸ்துவை) பின்பற்றுகிறவர்களைப்பார்க்கிலும் வேறே எந்தஜனங்களும் இரத்தத்தை அதிகமாய் விரும்புகிறதில்லை. ஏதாவது சம்பந்தமுண்டா? இருக்கலாம்! இரத்தத்தைப் பார்ப்பதினாலே நமது சாதியாருக்குக் கொடிய பாசங்கள் மூளுகின்றன; புலிக்கு எவ்வளவு ருசியுண்டாகிறதோ அவ்வளவு ருசி கிரிஸ்தவர்களுக்குண்டாகிறது. தீர்க்க அவஸ்தையைப் பார்த்துக்கொண்டிருப்பதினாலே ஹிருதயம் மழுங்கி, நமக்கு இயல்பாயுண்டாகிற நல்ல அபிப்பிராயங்கள் இரும்பாய்ப்போகின்றன. கிரிஸ்து சிலுவையிலறையப்பட்டதைக்குறித்து குருபீடங்களிலிருந்து சொல்லப்பட்ட கொடிய வர்னனைகளும் சிலுவையிலறையுண்டவனைத் தொழுவதும் வேறொரு பிரயோசனத்தைத் தருவதைப்பார்க்கிலும், மானிட ரத்தத்தில் ஆவலை வளர்க்க அதிக உதவியாயிருந்திருக்கின்றன. சகலதீமைக்கும் காரணனாயிருக்கிற இரத்தப்பிரியக்கடவுளை வெகுகாலமாய்த் தொழுதுவருவதும், நமது வாலிபர்களில் அநேகர் உள்ளாயிருக்கிற பைபில் சட்டத்தில் நெடுங்காலமாய்ப்படிந்து தோய்ந்திருப்பதும், இவையெல்லாம் நமது தேசத்தாரை மானிட உபத்திரவத்தை உணரவொட்டாமற் செய்வதற்கு அனுகூலமாயிருக்கின்றன. நாளதுவரையிலும் நமது குற்றவாளிகளைச் சிறையிலடைத்தும் பலகைமேற்படுக்கச்செய்தும் வேதனைப்படுத்தி வருகிறோம்; குருக்கள்மாரும் ராசாக்களும் தூக்குமரமில்லாமல் ஆளுகைசெய்வது இதுவரையில் அசாத்தியமாகவே காணப்படுகிறது.

ஜான்ஸ் என்பவருடைய விஷயமானது இந்தச் சங்கதியை அதற்குரிய சகல கோரங்களுடனே மறுபடி நமக்கெதிரில் கொண்டுவந்துவிடுகிறது. ஒருவன் கொலைசெய்கிறான், அல்லது கொலைசெய்ய எத்தனப்படுகிறான்; ஜனசமூகத்தார், அதாவது—பாதிரிமார், மாஜிஸ்திரேட்டு, ஜட்ஜி, ஜூரி முதலானவர்கள் சகலரும் சாந்தமாய் ஆழ்ந்த கருத்துடனே அவனைக் கொலைசெய்கிறார்கள்! அவர்களெல்லோரும் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று கூக்குரலிடுகிறார்கள். பழிக்குப்பழி வாங்குவது எனது வேலையாதலால் அதற்கு வதில்செய்வேனென்று கர்த்தர் சொல்லுகிறார். பழிக்குப்பழிவாங்குவது தனது வேலையென்று குருக்கள்சொல்லுகிறார். பழிக்குப்பழிவாங்குவது எனது என்று ஜட்ஜி சொல்லுகிறார். பழிவாங்குவது எங்களுதென்று ஜூரார்கள் சொல்லுகிறார்கள். அந்தவேலை தன்னதென்று தூக்குமரக்காரன் சொல்லுகிறான். அவ்வாறே ஜூரார்கள் குற்றவாளியென்று தீர்மானிக்கிறார்கள். (அந்த இழிவான வேலைக்காக) ஜட்ஜி கறுப்பு குல்லாய் போட்டுக்கொண்டு, ஐயோ பாவம்! கைதியைத் தூக்குக்குப்போவென்று சொல்லுகிறார்; குருக்கள் அவனுடைய ஆத்ம ரட்சிப்புக்கு வேலைசெய்து, அவனை ஒருமிக்கத் தூக்குக்கும் மோட்சத்

திற்கும் சித்தஞ்செய்கிறார்; பின்பு அந்த தேசத்தாருக்குள் உயர்ந்த தொழிலாளி அவனைக்கொலைசெய்கிறான்.

அவர்கள் அதைக் கொலையென்று சொல்லுகிறதில்லை; அது பின்னென்ன? இதுவும் முன்கொலைக்குச் சமானமான கொலைதான். அன்றியும், முதற்கொலைக்கு ஏதோ ஒவ்வொரு சமாதானமுண்டு, இரண்டாவதுகொலைக்கு ஒன்றுமில்லை. தூக்குக்குப் போகிறவர்களல்ல எப்போதும் பெரியகுற்றவாளிகள். ஜனசமூகமானது குற்றவாளிகளை விர்த்திசெய்து, பின்பு தன்னுடைய பராக்கிரமத்தைக் காட்டுவதற்கும், தான் மிகவும் பரிசுத்தமாயிருப்பதாகத் தெரிவிப்பதற்கும் அவர்களைக் கயிற்றால் கட்டுகின்றது!

பாருங்கள், இவையெல்லாம் கொடுந்தன்மை; கொடிய மதத்தினால் வளர்க்கப்பட்டு விகசிக்கப்படுகின்றன; உள்ளபடி கிறிஸ்துமதத்தைச் சேர்ந்தனவே, முக்கியமாய் அந்த மூடபக்தியைச் சேர்ந்தனவே. இரத்தஞ்சிந்தாமல் பாவ மன்னிப்பு கிடையாது. உயிர்போக்குந் தெண்டனையை நிறுத்திப்போட யார்சம்மதித்தபோதிலும் பாதிரிமார் சம்மதிப்பது அரிது. அவர்கள் பயமுறுத்தித்தான் ஆளவல்லவர்கள்; தூக்குமரமும் நரகாக்கினியுமில்லாவிட்டால், அவர்கள் உடனே விட்டொழியவேண்டியவர்கள்தான்.

ஒருமனிதனைத் தூக்கிற்போடுவதைப்பார்க்கினும் மகாஜனங்களுக்கு அதிக மூர்க்கமானசெய்கை வேறொன்றிருக்கிறதா? அதைக்குறித்து நினைத்துப்பாருங்கள். அதுகொலையைவிட அதிக கெட்டது. சாதாரணமாய் கொலையிலே கொலையுண்டவன் தனக்கு இன்ன ஆபத்து வரப்போகிறதென்று முந்தி தெரியாமலே யிறந்துபோகிறான்; குற்றவாளியோ மரணசிட்சைவிதிக்கப்பட்டபின்பு பலவிசை சிலவாரம் சும்மாவைக்கப்படுகிறான். மகாஜனங்கள் அவனைச்சித்திரவேதனை செய்கிறார்கள்: அதாவது—தூக்குமரத்தையும் கயிற்றையும் பாவித்துக்கொள்ளுவதற்கும், பின்கட்டாய்க்கட்டப்பட்டதாயும் கழுத்தில் கயிறுமாட்டியிருப்பதாயும் உணருவதற்கும், அதைக் கனவிற்கண்டு, கயிற்றில் தொங்குகிறாப்போல பெருமூச்செறிந்து, திகிலுடனே விழித்துக்கொள்ளுவதற்கும் அவனுக்கு சாவகாசங்கொடுக்கிறார்கள். அவன் ஒரேஒருதரம் ஒரு நபரைக்கொன்றதினாலே அவனை மகாஜனங்கள் ஆயிரந்தரம் கொலைசெய்கிறார்கள். இது—விசாரணைக்கர்த்தராகிய ஏகோவாவைப்போலவும் இக்காலத்துப் பாதிரிமாரைப்போலவும், ஆழ்ந்த கருத்துடனே சாந்தமாய்ப் பழிவாங்குகிறதல்லவா? அதை ஒருவன்செய்தால் மிகவும் பரிதாபப்படத்தக்கதுதான். ஆனால் ஒருதேசத்தாராகிய அசேஷ ஜனங்களும் ஒருவனைக் கொலைசெய்ய ஒன்றுசேர்ந்து, அதுவும் திருத்தமான கொடுமையோடு செய்வது எப்படிப்பட்டதோ? இது அளவிட்டுச் சொலலக்கூடாமையான மூர்க்கத்தனம்.

இந்தக் கொடியசட்டங்களைச்செய்து ஆதரித்துவரும்படி பார்லிமெண்டு மெம்பர்களை நிர்ப்பந்திக்கிற பாதிரிமார்களை நாம் நிர்ப்பந்திக்கிறவரையில் தூக்கில்போடுவது ஒழியாதென்று நினைக்கிறேன். நாம் கொஞ்சம் முன்னுக்கு அடியெடுத்துவைத்து பார்லிமெண்டு மெம்பர்களையாவது குருக்கள்மாரையாவது, தூக்கிற்போடுந் தங்கள் தொழிலை அவர்களையே நடத்தும்படி நாம் செய்கிறவரையில், தூக்குக்கொலையை நாம் நிறுத்தமாளாதென்பது எனது தாற்பரியம். முக்கியமாய் அவர்கள் சுயக்கியானி ஒருவனைத் தூக்கிற்போடவேண்டியதாயிருந்தால், அவர்களிற்சிலர் அதைத் தாங்களே செய்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நமது சட்டநிர்மாணதிகாரிகளே தங்கள் கொடிய சட்டங்களை நிறைவேற்றுவதைப் பார்ப்பது வேடிக்கையான காட்சிதான். அந்த துரைமார்கள் ஒருகுற்றவாளியின்பேரில் தங்கள் தொழிலைத் தாங்களேசெய்து முடிப்பதைப் பார்ப்பது பின்னும் விநோதமான காட்சியே. ஆயினும், ஒரு பிஷப்பாவது எத்தனையோ யுகங்களகண்ட ஏகோவாவாவது பூர்வீக மோஸ்தரிலே உக்கிரங்கொண்டு, தூக்குமரத்தைச் சுற்றிச்சுற்றிக் கூத்தாடிக்கொண்டு, ஏககாலத்தில் அரைடஜன்பேரைத் தூக்கிற்றொங்கவிட்டுச் சட்டத்தை நிறைவேற்றி, அது போதாமல் சுற்றுமுற்றும்பார்த்து, ஐயோ, இன்னும் தூக்கில் மாட்டுவதற்குப் பெருத்த கும்பு அகப்பட்டால் தாவளையாயிருக்குமேயென்று நினைத்து ஏங்கிநிற்பதைப்பார்ப்பது எவ்வளவு விநோதமான காட்சியாயிருக்கும்!

ஒருவனைத் தூக்கிற்போடும்படி உண்மையாகவே யிரக்கமுள்ள வேறொருவனுக்கு உத்தரவுசெய்யப்பட்டால், இவன் உடனேதன்னைத்தானே தூக்கிலமாட்டிக் கொள்வானென்று என்னுடையதுணிபு. கோபத்திலே நம்மில் அநேகர் அடிக்குஅடியாவது ஓடிக்கு இரண்டடியாவது அடிப்பார்களென்றும், நம்மைநாம் காத்துகொள்வதில் சட்டத்தைமீறிநடப்போம்அல்லது கொலைசெய்தாலுஞ் செய்துவிடுவோமென்றும் நாம்நினைக்கக்கூடும்; ஆனால் கோபமூட்டப்படாதிருக்கச்சே, சாந்தத்துடனே தனபோலியமனிதனை, முட்டையிலிருந்து கரியைக்கொட்டிவிடுவதுபோல ஏதோஒரு சாதாரணமான வேலைபுரியு மோஸ்தராகத் தூக்கில்மாட்டிக் கழுத்தையொடித்துக் கொல்லுகிறவனுடையநிலைமையை எண்ணிப்பார்ப்போம். இதைச்செய்யத்தக்கவன் சுத்தமாய் நாகரீகமற்ற இழிவான மவுடீகன்தான். இந்த ஒருசங்கதியே தூக்கிற்போடுவதை நிந்திப்பதற்குப் போதுமானதாயிருக்கிறது. நமதுதேசத்தாருக்குள் மிகவும் இழிவான மிலேச்சன்தவிர இந்தக்காரியத்தை வேறொருவன் செய்யமாட்டான். அணுவத்தனையாவது மனிதத்தன்மை யுள்ளவன் தூக்குப்போடுகிறவனா யிருக்கமாட்டான். இதனாலேயே தூக்கிற்போடுவது குற்றமென்றும், மகாஜனத்துக்கு அவமானமென்றும், நாகரீகத்துக்குப் பழியென்றும், கொடுமையில் மிகுந்துநிற்கிற அம்சமென்றும், ஆனால், மந்திரக்காரி, யூதன், மதப்பித்தொழிந்தவன் இப்படிப்பட்டவர்களை பூர்வகாலத்து பக்திமான்கள தீயிலிட்டுச் சுட்டெரித்து, கடவுளிடத்தும் மானிடரிடத்தும் தங்களுக்கிருந்த அன்பைத் தெரிவித்தகொடுமைகளுக்குப் புறம்பான கொடுமையென்றும், விளங்குகிறது.

A. M.

8த மெய்யறிவு.

உ-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா?

(208-வது பக்கத்தொடர்ச்சி.)

உன்மத்தன்விஷயத்தி லிருப்பதுபோல, மூளையின் ஏற்பாடு பழுதாகவாவது குறைவாகவாவ திருக்கும்போது, அறிவும் குறைவாயிருக்கிறதே, ஒரு உன்மத்தன் மனத்தொழிலைச் சரியாய்ச்செய்ததை எவனாகிலும் எப்போதாவது பார்த்திருக்கிறானா? அப்படிப்பட்டவனுக்கு நீ அறிவை யூட்டமாட்டுவையா? அறிவு விளங்கப்பண்ண முயற்சிசெய்தபோதிலும், அதுகுறைவு குறைவாகவேயிருக்கும். மனத்தொழில்களை நடத்துவது மூளையென்பதற்கு இந்தருஜுவே போதாதா? மூளையின்சக்தி குறைவாயிருக்கும்போ தெல்லாம் மனதின் சக்தியும் குறைந்தி ருப்பானேன்? என்று (Robert Cooper) வினவுகிறார்.

ஆத்துமாவின்தொழில் அறிவென்றால், தேகத்திற்கு நோயுண்டாகும்போது ஆத்துமாவின்தொழில் கெடுவானேன்? ஆத்துமா அழிவில்லாததாயிருக்க, அது அழியத்தக்க இந்ததேகத்தில் சேர்ந்து தேகம்படுகிற அவஸ்தைகளுக்கெல்லாம் ஆளாகுமோ? நாகசுரம் ஊதுகிறவன் அந்தநாகசுரம் கெட்டுப்போகும்போது அதில்ஊதியும் தொனியெழும்பாம லிருப்பதுபோல, மூளையைத் தன்னுடைய கருவியாகக்கொண்டு வேலைசெய்கிற ஆத்துமா அந்தக்கருவி கெட்டுப்போயிருக்கும்போது அதின்மூலமாய் ஒன்றும் செய்யத்தக்கதல்லவென்றால், ஆத்துமாவிற்கு மூளையென்பதொன்று இருக்கவேண்டுமென்றும் அந்த மூளை நல்லஸ்திதியி லிருக்கவேண்டு மென்றும் சொல்லவேண்டியதாகிறது. ஆத்துமாவிற்கு அவசியம் மூளை யிருக்கவேண்டியதாகில் மூளையில்லாவிட்டால், ஆத்துமா இருந்தும் பிரயோசனமில்லை; ஆத்துமா இருப்பதுகூடநமக்குத் தெரியாதல்லவா?

அறிவுக்கு ஸ்தானம் மூளையென்பதினால், தலையை தேகத்திலிருந்து வேறுபடுத்தியபோதிலும், மூளைதன்னுடைய அறியுந்தொழிலைச் செய்யவேண்டுமே யென்று கேட்கிறார்கள். அப்படிகேட்பதுநியாயமேயாயினும், மூளைக்கு ஹிருதயத்திலிருந்து ரத்தநாடிகளின் வழியாய் ரத்தம் போகவேண்டுமென்பதையும், அப்படி ரத்தம்போனாற்றான் மூளை தன்னுடைய வேலையைச்செய்யுமென்பதையும், ரத்தம்ஒழிய, அந்தவேலையும் ஒழியுமென்பதையும், அவர்கள் கவனிக்கவில்லை போலும். அப்படிக் கேட்கிறவர்களுக்கும்பிரமாண பூர்வகமாய் உத்தரஞ்சொல்ல ஐரோப்பாசாஸ்திரிகள் ஏற்பட்டிருக்கிறார்கள். (Dr. Buchner) புஷ்னர் என்னும் சாஸ்திரி அடியில் கண்டவாறு எழுதுகிறார்.—ஒரு நாயின் தலையை அறுத்துவிட்டு, அந்தத்தலையின் உயிர் படிப்படியாய் அற்று, கண்கள் மூடிக்கொண்டு, மற்றவுறுப்புகளும் முறைத்துக்கொள்ள, அந்தச்சமயத்தில் மூளைக்குப்போகிற நாடிகள்வழியாய்ரத்தத்தை உட்புகுத்தினால் சூடுஏறுகிறது, உயிர்நீங்கியதலைக்கு மறுபடி உயிரு

ண்டாகிறது, கண்கள் திறக்கின்றன, உணர்ச்சியும உண்டாகிறது, அந்தத்தலை பக்கத்திலிருக்கிறவர்களை கண்களால் உருட்டிஉருட்டிப் பார்க்கிறது; அந்தநாயின் பெயரைக்கொண்டு அழைத்தால் அழைக்கப்பட்டவழியாய்க் கண்கள் பார்க்கின்றன. உயிர்மறுபடிவருகிற இந்தக்குறிகள் அப்படி ரத்தம்ஏற்றிக் கொண்டிருக்கிறவரையில் இருக்கின்றன; ரத்தமேற்றுவதை நிறுத்தினால், அந்தக்குறிகள் ஒழிந்துபோகின்றன; மறுபடியும் ஏற்றினால் மறுபடியும் உண்டாகின்றன. மனிதனுடைய அறுபட்ட தலையில் இன்னும் இந்தபரிட்சை செய்து பார்க்கவில்லை; செய்தால் அப்படியே சித்தியாகுமென்று நினைக்கலாம். இப்படிப்பட்ட பரிசோதனை செய்துவருகிறவர்களில் முக்கியமானவராகிய (M. Brown Sequard) என்பவர் சிலநாளைக்குமுன்னேதான் ஒரு மனிதனிடத்திருந்து அறுத் தெடுத்துவிடப்பட்டகையில் பரிட்சைசெய்து பார்த்தார். உஷ்ணம், உணர்ச்சி, விரல்கள் மடங்கல் முதலியஅதற்குண்டான சகலதொழில்களும் நிறைவேறின. அவர் அலுத்துப்போகிறவரையில விட்டுவிட்டுச் செய்து சித்தியாவதை நிச்சயப்படுத்தினாரென்று, இப்படி மேற்கண்ட சாஸ்திரியார் சொல்வதைவிட வேறென்ன ருஜு வேண்டியிருக்கிறது? மேற்கண்ட நியாயங்களை சரியானவைகளென்று ஒப்புக்கொள்ளுகிறவர்கள் அடியில் கண்டிருக்கிற வர்த்தகசங்கதியை உண்மையான ஆத்மவியாபாரந்தானென்று நினையாமற்போகார்கள்.

கப்பல்யாத்திரை செய்தும் ஓடிஅலைந்துதிரிந்தும் ரத்நமுதலிய உயர்ந்தசரக்குகள் முதலாய்த் தாழ்ந்த சரக்குகள் வரையில் கொள்வன விற்பன செய்து, ஒவ்வொருசரக்கை எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை, எண்ணலளவை என்னும் ஒவ்வோரளவையால் அளந்து வர்த்தகம்பண்ணுகிற வியாபாரிகள் ஒருகால் லாபமடைவதும் ஒருகால் நஷ்டமடைவதும் போலல்லாமல், ஆத்துமாவென்னும் ஒரேஒருசரக்கை கிரயத்துக்குக் கொள்பவன் பெற்றுக்கொண்டதாக மந்திரமாகிய தந்திரத்தினால் பாவனைகாட்டி மயக்கிவிட்டு, எவ்வளவேனும் செலவிடாமலே தங்களிடத்திலேதானே எப்போதும் இருப்பாக வைத்துக்கொண்டு, அந்த ஒரேசரக்கைப் பலருக்கும் வாயினால் காட்டிக்காட்டி மறைத்துமறைத்து, பவித்திரம் பாபநாசனம், ஆத்மசுத்திபஞ்சகவ்யம், புண்ணியாவாசனம், தர்ப்பணம முதலிய காலணா அரையணா லாபமுள்ள சிறுவர்த்தகங்கள் தொடங்கி, துலாபாரமுதலிய பெருவர்த்தகங்கள் வரையில் எதையும் விடாமல் அந்த ஒரேசரக்கிலே, மேற்கண்ட நான்கு அளவைகளாலும் வாயினால் அளந்துகாட்டி, நஷ்டமென்பதெவ்வளவேனு மில்லாமல் நிச்சயமான லாபத்திற்கே வியாபாரஞ்செய்கிற நமது ஆசாரியர்களும் குருக்கள்மார்களும், தங்களுடைய சொந்தலாபத்திற்கேதங்கள் சரக்கை எவ்வளவுசிலாகித்துச் சிரேஷ்டப்படுத்தவேண்டியிருக்கிறதோ அதைநாமே யோசித்தறியவேண்டும்.

ஆத்துமா அழிவில்லாதபதார்த்த மென்பதொன்று ஏற்பட்டதினாலல்லவா உலகத்தில் அநேகமாக வெவ்வேறு மதங்களும், அந்தந்த மதத்திற்கு வெவ்வேறு வேதாகம சாஸ்திரபுராணங்களும், அதற்கு உபபலமாக அநேக அற்புதங்களும், இவைகாரணமாக நமக்கு வீண்திரவியச்செலவும், அநேகருக்கு ஜீவனோபாயமு முண்டாகி, எவ்வளவோ மலைந்து விரிந்துபோயிருக்கிறதென்று யாவருக்கும் ஸ்பஷ்டமாய்விளங்கும்.

ஆத்துமாவென்கிற அழிவில்லாத ஒருபொருள் இருக்குமாயின், அப்படிப்பட்ட பொருள் இல்லையென்று சொல்வதினாலே அது அற்றுப்போய் விடுமோ, அல்லது அதற்குத் தீங்குதான் வருமோ? நாம் இந்தவிஷயத்தை துரபிமான மில்லாமல் யோசித்துப்பார்த்து அறிந்துகொள்ளவேண்டும். (உண்மையான) சாஸ்திரானுசாரமாய்ப் பார்க்கில் மேற்கண்ட விதமாய்த்தான் முடியும். மனிதனுடைய ஆத்துமா அழிவில்லாததென்பதற்கு விக்கினம் வந்தபோதிலும், அவனுடைய நற்செய்கைகளுக்கு அழிவுவருமோ? அழிவுவருமென்றே சிலர்சொல்லுவார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தைப்பற்றி நான் எழுதுவதற்கு இது இடமல்லாததால், பின்வருஞ் சஞ்சிகைகளிலொன்றில் எழுதக்கருதுகிறேன். மனிதனுடையஆத்துமா அழிந்துபோவதானாலும், அவனுடைய நற்கிரியைகளும் நல்லெண்ணங்களும் அழியாமலேயிருந்து, பின்வருகிறவர்களுக்கு வழிகாட்டிக்கொண்டேயிருக்கும்.

வர்த்தமானம்.

பிரமாதம்.—சென்னையைச்சார்ந்த 'பீப்பில்ஸ்பார்க்கு' என்னுந்தோட்டத்தில் சிலவருஷங்களாய் நடந்துவருகிறபடி இவ்வருடத்திலும் சந்தைவேடிக்கை நடந்துவருகையில் சென்ற சுக்கிரவாரம் சாயங்காலம் தீபபொறிபட்டு பந்தல்பற்றிக்கொண்டு நேரிட்ட உயிர்ச்சேத முதலிய மகத்தான ஆபத்தை தெரிவிப்பது மிகவும் விசனகரமாயிருக்கிறது. மறுநாள் சனிவாரமும் சில பிரேதங்கள் உருதெரியாமையினாலும், சுற்றுப்பக்கங்களிலுள்ள தங்கள்தங்கள் உறவினரும் நண்பர்களும் என்னகதியானார்களோ வென்கிற ஏக்கத்தினால் ஜனங்கள் அலைந்துதிரிந்ததினாலும் பட்டணம் அல்லகல்லோலமாயிருந்தது. தீயினால் வருத்தமுற்றவர்களெல்லோரும் உடனுக்குடனே ஜனரல ஆசுபத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு, மற்ற ஆசுபத்திரிகளிலுள்ள ஸ்திரீவைத்தியர்கள் முதலாய் வெளிவைத்தியர்கள் சிலரும்வந்து உதவிசெய்தார்கள். துரைகள்முதலானவர்கள் தீயினின்றும் ஜனங்களைவெளிப்படுத்த வெகு பிரயாசையெடுத்துக்கொண்டார்கள். நசுங்குண்டும் மிதிபட்டும் இறந்தவர்கள் பலர். தோட்டத்திலகப்பட்ட பிரேதங்கள் 244, காயம்பட்டு ஆசுபத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டவர்கள் 104, அவர்களில் மறுநாள் 12 மணிக்குள் இறந்துபோனவர்கள் 48. இன்னும் இரண்டுமூன்றுநாள்செல்லாமல் செவ்வையான விவரந்தெரியவராது. சிலகுழந்தைகள் அகப்பட்டு அயலார்கொண்டுபோய்வைத்திருக்கிறார்கள்.

[இப்படிப்பட்ட சங்கட்டத்தினால் அச்சாபீசுக்கு வேலைக்காரர் ஒருவரும் வராமைப்பற்றி இவ்வாரபத்திரிகை கொஞ்சம் தடைபட்டது.]

பர்மா.—புத்தமதபெரியகுருக்களும் சிலமுக்கியமானகுருக்கள்மாரும் ஸர் பிரிடிரிக் ராபர்ட்ஸ் அவர்களைகிரிஸ்துமஸ்தினத்தில் கண்டுகொண்டு, தேசத்தில் அமைதியுண்டாயிருப்பதற்கு சகலவிதத்திலும் உதவிசெய்வதாகத் தங்களிஷ்டத்தைத் தெரிவித்தார்கள்; அந்தவிஷயமாய்ப் பிரபு அவர்கள் செய்துவருமுயற்சி இதுவரையில் விசேஷசித்தியடைந்ததென்று உறுதியாய்ச்சொன்னார்கள்.

அப்பர் பர்மாவிலேதற்காலத்தில் மிகுந்த குழப்பமுள்ளமாகாணம்-பேகனுக்கும் மயிங்கியனுக்கு மத்தியிலிருக்கிறமண்டுவின்தான்.

அப்பர்பர்மா வடபுறத்துக்கமீஷனராகிய மிஸ்டர் பர்கெஸ் அவர்கள் சமாதானமாகும்படி சாப்வாவை உடன்படுத்த திடமானசேனையோடுஉந்துச்குப்போக ஜனவரி-மீ-3-உ புறப்படுவார். காலாள்பட்டாளம் இரண்டும், 250 குதிரையுள்ள ராணுவமும், இரண்டுபீரங்கியும், மற்றதுருப்புகளும் ஷயாபோவிலிருந்துஞ்செல்லும்.

ஜனரல்ஸ்டேவார்ட்ஆனவர் எதிரிற்சென்றராணுவதுக்குடியை சத்துருகும்புசுட்டதாகவும், கலகக்காரர்களில் அநேகர்கும்புகும்பாய்த்தங்கள் நிலையைவிட்டுத்திரும்பியோட்டம் பிடிக்கிறதாகவும் சகடங்கிலிருந்து தந்தியடித்தார்.

இயூவுக்குவடமேற்கு 28 மயல்தூரத்திலுள்ள குழப்பமான கிராமத்தின்பேரில்அனுப்பப்பட்ட 14வது துக்குடி பட்டாளம் பதினொரு கலகக்காரர்களைகொன்று, சில ஆயுதங்களையும் 27 வண்டிகளையும் 198 மாடுகளையும் பிடித்துக்கொண்டதாகவும் நம்முடைய ஐதராபாத்துதினாப்படையில்ஒருவன்தான் காயப்பட்டதாகவும், இயூ மாகாணத்திலிருந்துவந்த ரிபோர்ட்டினால் தெரியவருகிறது.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	A.	P.	வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷெ	3-க்கு	0	10	0	ஷெ	3-க்கு	0	13	0
ஷெ	6-க்கு	1	2	0	ஷெ	6-க்கு	1	8	0

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.